**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.250/2024**

**நாள்.19.02.2026**

**வா.சா. 1- கமிதா பீவி**

**1மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மகன் இப்ராஹீமை காணவில்லை என வழக்குப் போட்டுள்ளேன். எனது மகன் இப்ராஹீமுக்கு திருமணம் ஆனதா என்றால் இல்லை. எனது மகன் இப்ராஹீம் எந்த வயதில் எப்போது காணாமல் சென்றார் என்றால் 25 வயதிருக்கும் அப்போது காணாமல் சென்றுவிட்டார். எனது மகன் இப்ராஹீம் எந்த இடத்தில் காணாமல் சென்றார் என்றால் கோயம்புத்தூரில். எனது மகன் இப்ராஹீம் காணாமல் சென்றுவிட்டார் என காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மகன் இப்ராஹீம் காணாமல் சென்றுவிட்டார் என செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எனது மகன் இப்ராஹீம் காணாமல் சென்றுவிட்டார் என கோயம்புத்தூரில் புகார் கொடுத்தேனா என்றால் எங்களது ஜமாத்திலும், கோயம்புத்தூர் ஜமாத்திலும் சொல்லி தேடிப்பார்த்தோம் ஆனால் கிடைக்கவில்லை. எனக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 6 பையன், 1 பெண். எனது கணவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. எங்களது ஜமாத்திலும், கோயம்புத்தூர் ஜமாத்திலும் எனது மகனை தேடிப்பார்த்து கிடைக்கவில்லை என அறிக்கை கொடுத்துள்ளார்களா என்றால் அறிக்கை கொடுக்கவில்லை. நான் எனது மகனை காணவில்லை என சங்கரன்கோவில் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் பள்ளிவாசல் மூலமாக மனு கொடுத்தேன். சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் எனது மகன் காணாமல் போனது சம்பந்தமாக உரிய நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி பேசி முடிக்கப்பட்டது என்றால் தெரியாது.

எனது மகன் காணாமல் போனது சம்பந்தமாக நான் காவல்துறை மூலமாக உரிய சட்ட வழிமுறைகளை பின்பற்றாமல், தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**1மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.19 18:23:19 +0530